# வெளிநாட்டுத் தமிழருடன் பேசும் ரணில் உள்நாட்டில் தமிழருக்குத் தவறான சமிக்ஞைகளையே தருகிறார்!

## மனோ கணேசன் எம்.பி. கடும் அதிருப்தி




“உலகத் தமிழர் பேரவை அங்கத்தவர்களை, தடை நீக்கம் செய்து அழைத்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பேசுவது நல்லதே. அதை நான் வரவேற்கின்றேன். ஆனால், அவர் உள்நாட்டில் தமிழருக்குத் தொடர்ந்து தவறான சமிக்ஞைகளைத் தருகின்றார். இதில் ஒன்று, மக்களுடன் எந்தவித நேரடித் தொடர்புகளும் இல்லாத அமைச்சர் டிரான் அலஸின் பேச்சைக் கேட்டு, எனது தொகுதி கொழும்பில் மீண்டும் பொலிஸ் பதிவுகளை ஆரம்பித்துள்ளமை ஆகும்.

இரண்டாவது, வடக்கு, கிழக்கிலாவாது மாகாண சபைத் தேர்தல்களை நடத்தி அங்கே மாகாண சபைகளை ஏற்படுத்த ரணில் தயாரில்லை என்பதாகும். மூன்றாவது, வரவு - செலவுத் திட்டத்தில் ரணில் உறுதியளித்த, மலைநாட்டில் 10 பேர்ச் காணி வழங்கல் பொறுப்பையும், அதற்கு ஒதுக்கப்பட்டதாகக் கூறப்படும் 400 கோடி ரூபாவையும் இப்போது யார் வைத்திருக்கின்றார்கள் என்பது தெரியாமையாகும் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

2 ➤

மாலைக்கதிர்
Maalaikkathir

யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு புதிய வியாபாரக்குறி!
A new brand from Jaffna!
பூ ஆடை
PooAadai
ஆண், பெண் இருபாலாருக்குமான ஆடைகள்

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 மார்கழி 01 செவ்வாய்க்கிழமை 19.12.2023 கதிர் 139

## தேசிய அடையாள அட்டைக்கான புகைப்படக் கட்டணம் அதிகரிப்பு

தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிப்பவர்கள் அங்கீகாரமுள்ள புகைப்பட நிறுவனங்களில் புகைப்படம் எடுப்பதற்காக அறவிடப்படும் அதிகபட்ச கட்டணம் ரூ.400 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

அதற்கமைய, 2016ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டிருந்த முன்னைய கட்டணம் இரத்துச் செய்யப்படுவதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு விசேட வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளது.

இதற்கு முன்னர் புகைப்படமொன்றிற்கு அதிகபட்சமாக 150 ரூபாய் அறவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. தேசிய அடையாள அட்டையை அல்லது அடையாள அட்டையின் நகலைப் பெறுவதில், விண்ணப்பதாரர்கள் அங்கீகாரம் பெற்ற புகைப்பட ஸ்டூடியோவில் எடுக்கப்பட்ட புகைப்படங்களையே ஒன்லைன் மூலம் ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்திற்கு 2 ➤

## யாழ்ப்பாணம் வந்த பயணிகள் விமானம் தரையிறங்காது சென்னைக்கு திரும்பியது

யாழ்ப்பாணத்தில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக சென்னையில் இருந்து யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தை வந்தடையவிருந்த விமானம் மீண்டும் சென்னைக்கு திரும்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சென்னை சர்வதேச விமான நிலையத்தில் இருந்து, இன்று யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்திற்கு புறப்பட்ட விமானமே, யாழில் தரையிறங்காது மீள சென்னைக்கு திரும்பியுள்ளது.

குறித்த விமானம் இன்று 11.40 ற்கு தரையிறக்க வேண்டிய நிலையில், சீரற்ற வானிலை காரணமாக வானில் 30 நிமிடங்களுக்கு மேலாக பறந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. பின்னர் அது சென்னைக்கு திரும்பி சென்றதாகவும் விமானநிலைய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## வடக்கிற்கான பாலியாற்று பாரிய குடிநீர் வழங்கல் ஜனவரியில் ஜனாதிபதி விஜயத்தின்போது ஆரம்பம்

### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு

வடக்கிற்கான பாலியாற்று பாரிய குடிநீர் வழங்கல் திட்டம் ஜனவரி 4, 5, 6 ஆம் திகதிகளில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வடக்கிற்கான விஜயத்தின் போது ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

வடக்கு மக்களின் நீண்டகால குடிநீர்ப் பிரச்சினைக்கு தீர்வுகாணும் பொருட்டு பாலியாற்று நீர் வழங்கல் திட்டத்தை முன்னெடுக்கும் முக்கிய கலந்துரையாடல் கடற்றொழில் அமைச்சரும் யாழ்,கிளிநொச்சி மாவட்டங்களின் ஒருங்கிணைப்புக்குழு தலைவருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இன்று யாழ் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம்,யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரன், நீர்ப்பாசன நீர்வழங்கல் முகாமையாளர்கள் மற்றும் துறைசார் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளர் என். சுதாகரன் பாலியாற்று குடிநீர்த் திட்டம் தொடர்பாக விரிவாக



எடுத்துரைத்தார்.

இத்திட்டம் தொடர்பில் கடந்த காலங்களில் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அது கைகூடாத நிலையில் கடந்த ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்த நிலையில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்ட முயற்சியின் பலனாக அமைச்சரவை இத்திட்டத்திற்கு 250 மில்லியன் ரூபாவை ஒதுக்குவதற்கான அங்கீகாரம் கிடைத்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. (01)

## யாழ் மாவட்டத்தில் மழை காரணமாக 1523 பேர் பாதிப்பு - 24 வீடுகள் சேதம்

யாழ்ப்பாண மாவட்டத்தில் பெய்துவரும் மழை காரணமாக 435 குடும்பங்களைச் சேர்ந்த 1523 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 24 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் ரி.என். சூரியராஜா தெரிவித்தார்.

சங்கானை பிரதேச செயலக பிரிவில் 214 2 ➤



## வட்டுக்கோட்டை இளைஞன் கொலை வழக்கு ஜனவரி 2ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது

வட்டுக்கோட்டை இளைஞன் படுகொலை வழக்கில் மரண விசாரணை தொடர்பான கட்டளை எதிர்வரும் ஜனவரி 2 ஆம் திகதி வழங்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் இன்றைய தினம் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது இறந்த நபரை மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்திய பொலிஸார், வட்டுக்கோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட சிலர் மரண விசாரணையில் சாட்சியம் வழங்கினர்.

இதேவேளை மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்த முன்னர் உயிரிழந்தவர் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெல்லிப்பளை சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கை, மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தின் உத்தரவில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் உயிரிழந்த நபரை அனுமதித்தமை தொடர்பான மருத்துவ அறிக்கையை சமர்ப்பிக்க ஆவண செய்யுமாறு நீதிமன்ற பதிவாளருக்கு யாழ்ப்பாணம் நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா உத்தரவிட்டார். 2 ➤

## ஜனவரியில் வடக்குக்கு வருகிறார் ஜனாதிபதி

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் ஜனவரி மாதம் 6ஆம் திகதி வடக்கு மாகாணத்துக்கு வருகை தரவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

வவுனியாவில் இடம்பெறும் நிகழ்வில் பங்கேற்பதற்கு வருகை தரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அன்றைய தினம் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் விசேட மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் பங்கேற்கவுள்ளார் என்று கூறப்படுகின்றது. (அ)

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# மத்திய மாகாண அம்பியூலன்ஸ் சாரதிகள் இரண்டு நாட்கள் வேலை நிறுத்தத்தில்

மத்திய மாகாணத்தில் உள்ள அம்பியூலன்ஸ் சாரதிகள் இன்று (19) மற்றும் நாளை (20) ஆகிய இரண்டு நாட்களுக்கு வேலை நிறுத்தத்தில் ஈடுபடுகின்றனர் என மத்திய மாகாண அம்புலன்ஸ் மற்றும் போக்குவரத்து சாரதிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

மத்திய மாகாண ஆளுநரால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள இடமாற்ற முறைமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலேயே இந்த வேலை நிறுத்த போராட்டம் முன்னெடுக்கப்படுவதாக சங்கத்தின் தலைவர் சம்பத் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், சுகாதார திணைக்களத்தின் நிறுவன சட்டத்தின்படியே இதுவரை எமது இடமாற்றங்கள் நடந்துவந்தன. ஆனால் அங்கீகரிக்கப்பட்ட ஒருங்கிணைந்த ஒட்டுநர் சேவையின் இடமாற்ற கொள்கையின்படி மத்திய மாகாண ஆளுநர் மூலம், நாங்கள் இம்முறை வெளி இடங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளோம். ஒரு சிலரின் தேவைக்காகவே இவ்வாறு வழமைக்கு மாறான முறையில் இடமாற்ற தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி இம்முறை, புதிய இடமாற்றல் முறையின்கீழ் 15 சிரேஷ்ட அனுபவம் வாய்ந்த அம்பியூலன்ஸ் ஓட்டுனர்கள் அவர்களின் கோரிக்கைக்கு மாறாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்த இடமாற்றத்தை நிறுத்தக்கோரி இரண்டு நாள் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளோம். மத்திய மாகாண மக்களுக்கு சேவையாற்றும் இந்த அனுபவமிக்க சேவையாளர்கள் இவ்வாறு இடமாற்றம் செய்யப்படுவதற்கு எமது எதிர்ப்பை தெரிவிக்கின்றோம்.

நமது கோரிக்கை நிறைவேற்றப்படாவிட்டால் ஜனவரி முதலாம் திகதி முதல் தொடர் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவோம் என்றார். (ரெதி-13)

# வெளிநாட்டு தொழில் பயிற்சி நிலையங்களை நிறுவ அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது

நாட்டின் மூன்று பிரதேசங்களில் வெளிநாட்டு தொழில் பயிற்சி நிலையங்களை நிறுவுவது தொடர்பில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரினால் கொண்டுவரப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் வேலைவாய்ப்பிற்காக வெளிநாடு செல்வோரை இலக்காகக் கொண்டு கொண்டு இந்த குறித்த பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்தவுள்ளது.

எனவே, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் கீழ் யாழ்ப்பாணம், ஹோமாகம மற்றும் அம்பாறை ஆகிய இடங்களில் பயிற்சி நிலையங்களை நிறுவ அமைச்சர் இதன் மூலம் முன்மொழிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரெதி-14)

## கஞ்சா வைத்திருந்த இரண்டு இளைஞர்கள் கொக்குவில் கிழக்கில் பொலிஸாரால் கைது



யாழ்ப்பாணம் கொக்குவில் கிழக்கு பகுதியில் இரண்டு இளைஞர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

50 கிராம் கஞ்சா கலந்த மாவாவை உடைமையில் வைத்தி ருந்தார்கள் என்ற அடிப்படையி லேயே இருவரும் நேற்று (18) இரவு கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாண மாவட்ட புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவலுக்க மைய குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

சந்தேக நபர்களை யாழ்ப்பாணம் நீதவான் நீதி மன்றத்தில் இன்று முற்படுத்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

## வட்டுக்கோட்டை இளைஞன் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மரண விசாரணை தொடர்பான கட்டளைக்காக எதிர்வரும் ஜனவரி 2ம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

வழக்கில் உயிரிழந்த இளைஞன் சார்பில் பெருமளவான சட்டத்தரணிகள் ஆஜராகினர்.

வட்டுக்கோட்டை பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட நாகராசா அலெக்ஸ் எனும் இளைஞன் சித்திரவதைகளுக்கு உள்ளான நிலையில் நவம்பர் 19ஆம் திகதி உயிரிழந்தார். (அ)

## யாழ் மாவட்டத்தில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குடும்பங்களைச் சேர்ந்த 267 பேரும், பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவில் 146 குடும்பங்களைச் சேர்ந்த 485 பேரும், சாவகச்சேரி பிரதேச செயலக பிரிவில் 60 குடும்பங்களைச் சேர்ந்த 205 பேரும், கோப்பாய் பிரதேச செயலக பிரிவில் 10 குடும்பங்களைச் சேர்ந்த 41 பேரும், சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவில் 4 குடும்பங்களைச் சேர்ந்த 19 பேரும், உடுவில் பிரதேச செயலகப் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஆறு பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி பிரதேச செயலக பிரிவில் 14 குடும்பங்களைச் சேர்ந்த 46 பேர் அன்னை முன்பள்ளி நிலையத்தில் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டுள்ளனர், என்றும் அவர் குறிப்பிட்டார். (01)

## தேசிய அடையாள .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுப்ப வேண்டும் என்பது கட்டாயமாகும்.

மேலும், எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் டிஜிட்டல் அடையாள அட்டை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன்படி புதிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிப்பவர்களுக்கு டிஜிட்டல் அடையாள அட்டை வழங்கவும், பின்னர் படிப்படியாக முழு நாட்டு மக்களுக்கும் டிஜிட்டல் அடையாள அட்டை வழங்கவும் அரசு திட்டமிட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ரெதி-12)

## வெளிநாட்டுத் தமிழருடன் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் அவர் இன்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைக் கடந்த வாரம் அவரது நாடாளுமன்ற அலுவலகத்தில் நேரடியாகச் சந்தித்து மூன்று விடயங்கள் குறித்து கேள்விகளை எழுப்பிக் கோரிக்கை விடுத்தேன்.

தற்போது சனத்தொகை புள்ளிவிபரக் கணக்கெடுப்பு சிவில் அதிகாரிகள் செய்யும் வேலைகளுக்கு மேலதிகமாக, உங்கள் அமைச்சர் டிரான் அலஸின் பொலிஸ்காரர்களை தமிழர்களின் வீடுகளுக்கு சிங்களத்தில் மட்டும் படிவங்களுடன் அனுப்பி, சிவில் அதிகாரிகள் செய்யும் வேலைகளை செய்து, எனது தொகுதி கொழும்பில் வாழும் தமிழர் மத்தியில் தேவையற்ற பதட்டங்களை ஏன் ஏற்படுத்துகின்றீர்கள்?

குறைந்தபட்சம் உடனடியாக வடக்கு, கிழக்கு மாகாணங்களிலாவது மாகாண சபைத் தேர்தல்களை நடத்தி, அங்கே முதற்கட்டமாக மாகாண சபை நிர்வாகங்களை ஏற்படுத்தலாம். அதை ஏன் இழு, இழு என்று இழுத்துகொண்டே போகின்றீர்கள்?

மலைநாட்டு பெருந்தோட்டங்களில், நீங்கள் வரவு - செலவுத் திட்டத்தில் உறுதியளித்த 10 பேர்ச் காணித் துண்டுகளைப் பெருந்தோட்டங்களில் வாழும் குடும்பங்களுக்கு வழங்கலாம்.

இந்திய, இலங்கை வீடமைப்பு திட்டங்களின் வீடு கட்டும் பணிகள், அரச நிர்வாக கட்டமைப்புகளின் ஊடாக நடைமுறையாக தாமதம் ஆகும். ஆகவே, காணி வழங்கலுக்காக நீங்கள் ஒதுக்கிக்கொண்டுள்ள 400 கோடி ரூபாவைப் பயன்படுத்தி, காணிகளைப் பிரித்து வழங்கலாம். ஆனால், இந்த 10 பேர்ச் காணி வழங்கல் பொறுப்பையும், அதற்கு ஒதுக்கப்பட்டதாகக் கூறப்படும் 400 கோடி ரூபாவையும் இப்போது யார் வைத்திருக்கின்றார்கள்?

இந்தக் கேள்விகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதில் கூற வேண்டும். அல்லது அவருடன் கூட்டுக் குடித்தனம் செய்கின்றவர்கள் பதில் கூற வேண்டும். இவை தொடர்பில் கடந்த வாரம் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் ஏற்பாடு செய்திருந்த வெளிநாட்டுப் பிரதிநிதிகளுடனான சந்திப்பில், இலங்கைக்கான அமெரிக்கா, இந்தியா, சுவிஸ், நெதர்லாந்து, கனடா, பிரான்ஸ், தென்னாபிரிக்கா, இத்தாலி நாடுகளின் தூதுவர்களும் ஜப்பான், அவுஸ்திரேலியா, பிரிட்டன், நியூசிலாந்து, ஐரோப்பிய யூனியன் ஆகிய நாடுகளின் துணை தூதுவர்களும், முதன்மை அதிகாரிகளும் கலந்துகொண்ட நிகழ்விலும் அவர்களுக்கு விளக்கமாக நான் எடுத்துக் கூறியிருந்தேன்." - என்றுள்ளது. (அ)


முல்லை ஓய்வு நகர் Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் - பாரம்பரிய முறையிலான வாழ்க்கை - ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் - பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி - தியான மண்டபம் - மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் - உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் - பாரம்பரிய உணவகம் - பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் - யோகா நிலையம்
விருந்தினர் விடுதி - சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் - தாரா பண்ணை
பூங்கா - நடைபயிற்சிப் பாதை - உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி - விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557



விற்பனையாளர் தேவை
**நிறுவனம்:** யாழ்முற்றம்
**பால்:** இருபாலரும்
**வேலை நேரம்:** காலை 7:00 மணி - மாலை 7 மணி வரை
**சம்பளம்:** பேசித் தீர்மானிக்கப்படும்
**தொடர்புகளுக்கு:** +94 77 307 8799



உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com



செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்

# கல்முனைப் பிராந்திய மலேரியா ஒழிப்பு பணி உத்தியோகத்தர், ஊழியர்களுக்கு கௌரவிப்பு




(நூருல் ஹுதா உமர்)

கல்முனை பிராந்திய மலேரியா தடை இயக்க பிரிவின் நலன்புரிச் சங்கத்தினால் மலேரியா ஒழிப்பிற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட உத்தியோகத்தர்கள் ஊழியர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு 17 ஆம் திகதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது

மலேரியா தடை இயக்க பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.எம்.நௌஷாத் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸதீன் பிரதம அதிதியாகவும், நிந்தவூர் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் எம்.பீ.அப்துல் வாஜித், பிராந்திய பொதுச் சுகாதார மற்றும் தர முகாமைத்துவ பிரிவுகளின் பொறுப்பு வைத்திய அதிகாரி அடதக்டர் எம்.ஏ.ஹில்மி ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும், கணக்காளர உசைனா பாரிஸ் விசேட அதிதியாகவும் கலந்து சிறப்பித்தனர்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் அனுசரணையின் கீழ் நடாத்தப்பட்ட தெரிவின் பிரகாரம் பிராந்திய மலேரியா தடை இயக்க பிரிவில் திறம்பட பணியாற்றிய உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் பலரும் இந்நிகழ்வின் போது சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் சுமார் 18 வருடங்கள் குறித்த பிரிவில் பணியாற்றி ஓய்வு பெற்ற திரு. என்.சந்திரலிங்கம் நினைவுச் சின்னம் வழங்கியும் கௌரவிக்கப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்த குறித்த பிரிவு உத்தியோகத்தர்களின் பிள்ளைகளும் இந்நிகழ்வின் போது அதிதிகளினால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக அண்மையில் பதவியேற்று பணியாற்றி வருகின்ற வைத்திய கலாநிதி திருமதி சகிலா இஸ்ஸடீன் அவர்களை பிராந்திய மலேரியா தடை இயக்க பிரிவினர் வாழ்த்தி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவித்ததுடன் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பனிப்பாளராக பணியாற்றி பிராந்திய சுகாதாரத்துறைக்கு அளப்பெரிய சேவையாற்றிய முன்னாள் பிரதி பிராந்திய பணிப்பாளரும், நிந்தவூர் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகருமான டொக்டர் எம்.பீ.அப்துல் வாஜித் அவர்களும் இதன்போது பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

## திருக்கோவிலில் ஒளிவிழா





திருக்கோவில் புனித சூசையப்பர் தேவாலயத்தில் இவ்வாண்டிற்கான வருடாந்த ஒளிவிழாவும் குடும்ப ஒன்று கூடலும் பங்குத் தந்தை வண. அன்ரனி டிலியா தலைமையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம் பெற்றது.

**(படங்கள் வி.ரி.சகாதேவராஜா)**

## மாணவர் தூதுவர் தேசிய வேலைத்திட்டம் 2ஆம் கட்டச் செயலமர்வு திருமலையில்





(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்டச் செயலகம் மற்றும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் ஏற்பாட்டில் " மாணவர் தூதுவர் தேசிய வேலைத்திட்டம்" தொடர்பான இரண்டாம் கட்டச் செயலமர்வானது மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாராய்ச்சி தலைமையில் நேற்று திருகோணமலை மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

2024 ஆம் ஆண்டு பாடசாலைகளில் நடைமுறைப் படுத்தக்கூடிய முன்னாயத்த திட்டங்களை உருவாக்குவது தொடர்பாகவும் மற்றும் கல்வி, சுகாதாரம், பாதுகாப்பு போன்ற மூன்று துறைகளுக்குரிய செயலமர்வும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

சிறுவர்களின் உரிமைகள், சிறுவர் பாதுகாப்பு, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் சேவைகளைப் எவ்வாறு பெற்றுக்கொள்ளல், மாணவர் தலைவர்கள் தமக்கான தலைமைத்துவ பண்புகளை வளர்த்துக் கொள்ளும் விதம், பாடசாலைகளின் சிறுவர் பாதுகாப்பு தொடர்பான பல்வேறுபட்ட விடயங்கள் இதன் போது மாணவர்களின் மத்தியில் தெளிவூட்டப்பட்டது.

இந் நிகழ்வில் மாவட்ட உள சமூக உத்தியோகத்தர் மு.மு.மு.ஸம்ஸீத், மகளீர் மற்றும் சிறுவர் பாதுகாப்பு பொலிஸ் பிரிவு உத்தியோகத்தர் நளினி, வைத்தியர் முபீஸ் ஹனிபா மற்றும் பாடசாலை மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



# சீனாவில் நிலநடுக்கத்தில் 116 பேர் பலி சிக்கியுள்ள மக்களை மீட்கும் பணி தீவிரம்



சீனாவின் வடமேற்கு பகுதியான கான்சு மற்றும் கின்காய் மாகாணங்களில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் 116 பேர் பலியாகியுள்ளனர். இடிபாடுகளில் சிக்கியுள்ள மக்களை மீட்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

இதில் 500 க்கும் மேற்பட்ட மக்கள் காயப்பட்டுள்ளனர். வீடுகள் மற்றும் சாலைகள் கடுமையாக சேதமடைந்துள்ளன. மின்சாரம் மற்றும் தொலைத் தொடர்பு துண்டிக்கப் பட்டுள்ளது. 6.2 ரிச்டர் அளவில் பதிவாகியுள்ள இந்த நிலநடுக்கம் திங்கள் கிழமை இரவு ஏற்பட்டதாக சீனா தெரிவித்துள்ளது.

நிலத்தடியில் 10 கிலோமீற்றர் ஆழத்தில் மையம் கொண்டிருந்த இந்த நிலநடுக்கத்தால் கான்சு பகுதியில் மட்டும் 105 பேர் பலியாகியுள்ளனர். 397 பேர் காயப்பட்டுள்ளனர். மையத்தைச் சுற்றி நூறு கிலோ மீட்டர்களுக்கு இந்த நிலநடுக்கம் உணரப்பட்டதாகக் கூறப்படுகிறது.

4000 இற்கும் அதிகமான தீயணைப்பு வீரர்களும், ராணுவ வீரர்களும், காவல் துறை அதிகாரிகளும் தீவிர மீட்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டு உள்ளனர் என்று தெரிவிக் கப்படுகிறது. (04)

## எகிப்து தேர்தலில் அதிபர் அல்-சிசி மூன்றாவது முறையாகவும் வெற்றி!



எகிப்து அதிபர் தேர்தலில் தற்போதைய அதிபர் அப்தெல் ஃபட்டா அல்-சிசி மூன்றாவது முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

அந்த நாட்டின் அடுத்த அதிபரைத் தேர்ந்தெடுப்பதற் கான தேர்தல் கடந்த 10 முதல் 12 ஆம் தேதி வரை நடைபெற்றது. அதன் முடிவுகள் நேற்று அறிவிக்கப் பட்டன.

அதன்படி, அல்-சிசிக்கு ஆதரவாக 89.6 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன. அதையடுத்து, நாட்டின் அதிபராக அவர் மூன்றாவது முறையாக பதவியேற்க விருக்கிறார்.

மேற்கத்திய நாடுகளுடன் நெருங்கிய நட்புறவைப் பேணி வரும் அல்-சிசி, மனித உரிமை மீறல்களிலும், அரசியல் எதிரிகளை நசுக்கும் செயலிலும் ஈடுபட்டு வருவதாக விமர்சிக்கப்பட்டு வருகிறார்.

அவர் இந்தத் தேர்தலில் வெற்றி பெறுவார் என்று ஏற்கெனவே எதிர்பார்க்கப்பட்டது. அவரது வெற்றிக்கு பல உலகத் தலைவர்கள் வாழ்த்துத் தெரிவித்துள்ள னர். (04)

## தமிழகத் தென்மாவட்ட மழைப் பாதிப்பு ஆளுநர் ரவி அதிகாரிகளுடன் ஆலோசனை



தமிழகத்தின் தென்மாவட்ட கனமழை பாதிப்பு மற்றும் அங்கு நடந்து வரும் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் குறித்து இந்திய மத்திய அரசின் பல்வேறு துறையின் உயர் அதிகாரிகளுடன் தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி ஆலோசனை மேற்கொண்டார்.

சென்னையில் உள்ள ஆளுநர் மாளிகையில், ஆளு நர் ஆர்.என்.ரவி தலைமையில் இன்று ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், இந்திய ராணுவம், விமானப் படை, கப்பல்படை, தேசிய பேரிடர் மீட்புப் படை, இந்திய வானிலை மையம், தொலைத் தொடர்பு நிறுவனங்கள், ரயில்வே உள்ளிட்ட மத் திய அரசின் உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டார். இக்கூட்டத்தில், வெள்ளம் பாதித்த தென்மாவட்டங்களில் தற்போதைய நிலவரம் குறித் தும், மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

இதனிடையே, தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள கூடுதல் ஹெலிகொப்டர்கள் அனுப்பக் கோரி பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்குக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார். (04)

# கப்பல்கள் அனுப்புவதை முன்னணி நிறுவனங்கள் நிறுத்தின!

## செங்கடல் வழியாகச் செல்லும் சரக்குக் கப்பல்கின் மீது யேமனின் ஹூதி கிளர்ச்சியாளர் தாக்குதலின் எதிரொலி




செங்கடல் வழியாகச் செல்லும் சரக்குக் கப்பல்கள் மீது யேமனின் ஹூதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்துவதால் அந்தக் கடல் பாதையில் தங்கள் கப்பல்கள் இயக்கப்படுவதை முன்னணி கப்பல் நிறுவனங்கள் நிறுத்திவைத்துள்ளன.

இது குறித்து டென்மார்க்கைத் தலைமையகமாகக் கொண்டு செயல்பட்டு வரும் முன்னணி கப்பல் போக்கு வரத்து நிறுவனமான மேயர்ஸ்க் வெளியிட்டுள்ள அறிக்கையில், செங்கடல் வழியாகச் செல்லும் சரக்குக் கப்பல்கள் தொடர்ந்து ஏவுகணைத் தாக்குதலுக்குள்ளாகி வருகின்றன. எனவே, அந்தக் கடல் பாதை வழியாக நிறுவனத்தின் கப்பல்கள் இயக்கப்படுவதை தற்காலி கமாக நிறுத்திவைத்துள்ளோம், என்று குறிப்பிடப்பட்டுள் ளது.

ஏற்கெனவே, ஜெர்மனியைச் சேர்ந்த ஹபாக் - லாயிட் உள்ளிட்ட முன்னணி கடல்வழி சரக்குப் போக்குவரத்து நிறுவனங்கள் இதே முடிவை எடுத்துள்ளன.

ஈரான் ஆதரவு பெற்ற ஹூதி இன கிளர்ச்சிப் படை யினர் யேமனின் கணிசமான பகுதிகளை தங்களது கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளனர். இஸ்ரேலுக்கும், ஹமாஸ் அமைப்பினருக்கும் இடையே போர் தொடங்கி யதிலிருந்து, தங்கள் நாட்டையொட்டி செங்கடல் வழியாகச் செல்லும் சரக்குக் கப்பல்கள் மீது அவர்கள் ஏவுகணைத் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்தப் போரில் ஹமாஸ் அமைப்பினருக்கு தங்களது ஆதரவை தெரிவித்துள்ள அவர்கள், இஸ்ரேல் தொடர் பான கப்பல்கள் மீது தாக்குதல் நடத்துவதாகக் கூறி வருகின்றனர்.

முக்கியத்துவம் வாய்ந்த பாப் எல்-மண்டெப் நீரி ணைக்கு அருகே வரும் கப்பல்கள் மீது தங்கள் பகுதி யிலிருந்து ஹூதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தி வருகின்றனர். இதில் சில கப்பல்கள் சேதமடைந்துள்ளன.

இந்தச் சூழலில், செங்கடல் வழியாக தங்கள் கப்பல்கள் இயக்கப்படுவதை நிறுத்திவைப்பதாக முன்னணி கப்பல் நிறுவனங்கள் தற்போது அறிவித்துள்ளன.

கப்பல்கள் மீது ஹூதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்துவதால் அவர்களுக்கோ, காஸாவில் போரிடும் ஹமாஸ் அமைப்பினருக்கோ ராணுவரீதியில் எந் தப் பலனும் கிடைக்காது. இருந்தாலும், உள்நாட்டில் தங்களுக்கான ஆதரவைப் பெருக்கிக்கொள்வதற்காக இத்தகைய தாக்குதல்களில் ஹூதி கிளர்ச்சியாளர்கள் ஈடுபடுவதாகக் கூறப்படுகிறது. (04)

# ஊடகவியலாளர்கள், கலைஞர்களுக்கான மூன்று நாள் வதிவிடச் செயலமர்வு






(ரஸீன் ரஸ்மின்)

அடிமட்டங்களுக்கான முரண்பாடு தீர்வு தொடர்பிலான ஊடகவியலாளர்கள் மற்றும் கலைஞர்களை தெளிவுபடுத்தும் 3 நாள் வதிவிட செயலமர்வு அலவ்வ - துல்ஹிரியவில் அமைந்துள்ள MASSATENA பயிற்சி நிலையத்தில் இடம்பெற்றது.

ஜரோப்பிய ஒன்றியத்தின் நிதி அனுசரணையில் இயங்கும் வேல்ட் விசன் நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்டுவரும் GRACE PROJECT திட்டத்தின் கீழ் சனிக்கிழமை முதல் திங்கட்கிழமை வரை இடம்பெற்ற இந்த செயலமர்வில் புத்தளம் மற்றும் கம்பஹா மாவட்டங்களில் உள்ள ஊடகவியலாளர்கள் , கலைஞர்கள் பலர் கலந்துகொண்டனர்.

சமூக நல்லிணக்கத்தின் செயற்பாடுகளில் துறை சார்ந்தவர்களின் பங்களிப்பு அது போன்று இன ஒற்றுமை என்பவைகளை கருத்திட்டமாக கொண்டு இந்த செயலமர்வு முன்னெடுக்கப்பட்டிருந்தது.

அடிப்படையாக ஒரு மனிதன் அல்லது குழுக்களினது அமையப் பெறவேண்டிய 9 அம்சங்கள் பற்றிய அறிவு பற்றி விளக்கம், எதிர்பார்க்கும் இலக்கின் ஒரு முக்கிய கருபொருளாக அமைந்திருந்தமை இதன் சிறப்பு அம்சமாகும்.

சமூக விஞ்ஞான கட்டமைப்பு எதனை மக்களுக்கு வலியுறுத்துகின்றது என்ற எடுகோளின் அடிப்படையில் பல்வேறு செயல்பாடுகள் ஊடாக கருத்துப் பறிமாறல்கள் இதன் போது பகிரப்பட்டது.

பல்வேறு தலைப்புக்களில் காலத்தின் தேவை,மக்களின் மாற்றத்திற்கான அடிப்படை போன்ற விடயங்கள் என்பன எந்த வகையில் சிந்தனை ரீதியான மாற்றங்களுக்கு உந்து சக்தியாக அமையும் என்பதற் கான பல உதாரணங்கள் மூலம் செயலமர்வின் போது பயிற்றுவிப்பாளர் கலாநிதி சுனில் சிறிவர்தனவினால் எழுந்தமான உவமானங்கள்,மற்றும் பெயர் பெற்ற சர்வதேச பிரபலங்களின் உதாரணங்களுடன் விளக்கமளிக்கப்பட்டன.

இதேவேளை செயலமர்வின் இறுதிநாளான நேற்று திங்கட்கிழமை மாலை இடம் பெற்ற இறுதி நிறைவு அமர்வின் போது world vision நிறுவனத்தின் Grace Project முகாமையாளர் தீப்தி சில்வா , புத்தளம் மாவட்ட செயலாளர் எச்.எம்.எஸ்.பி. ஹேரத், கம்பஹா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஜே.டபிள்யூ. எஸ்.கித்சிறி உள்ளிட்ட பலரும் பிரசன்னமாகியிருந்தனர்.

மேலும், மக்கள் மத்தியில் பணிகளை முன்னெடுக்கவுள்ள ஊடகவியலாளர்கள் மற்றும் கலைஞர்களை வட்ஸ்அப் குழுமத்தில் இணைக்கும் செயற்பாட்டினை புத்தளம் மாவட்ட செயலாளர் மற்றும் கம்பஹா மாவட்ட மேலதிக செயலாளர் ஆகியோர் உத்தியபூர்வதாக ஆரம்பித்து வைத்தனர்.

# தென்கிழக்குப் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களுக்கு இலகு முகாமைத்துவம் தொடர்பான பயிற்சிப் பட்டறை!



(நூருல் ஹுதா உமர்)

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக தொழிலாளர் மேம்பாட்டு மையம் ஏற்பாடு செய்திருந்த “Essential Soft Skills for Management Assistants and Allied Grade Staff” என்ற தொனிப்பொருளிலான பயிற்சி பட்டறை ஒன்று காஞ்சிரங்குடா கால்நடை வளர்ப்பு விவசாய பயிற்சி நிலையத்தில் தொழிலாளர் மேம்பாட்டு மையத்தின் தலைவர் பேராசிரியர் சல்பியா உம்மா தலைமையில் இடம்பெற்றது.

ஊழியர்கள் தங்களது கருமங்களை இலகுவாக ஆற்றுவதற்கான பல்வேறு யுக்திகளை பயிற்சி பட்டறையின் வளவாலர்களாக கலந்துகொண்ட பேராசிரியர் எம்.சி.ஏ. நாசர், மற்றும் வர்த்தக முகாமைத்துவ பீடத்தின் பீடாதிபதி கலாநிதி எஸ்.சபீனா ஹசன் எம்.ஜி. கலாநிதி எம்.ஐ. நௌபல் ஆகியோர் எடுத்துக் கூறினார்.

தென்கிழக்கு பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களில் 50 பேர் குறித்த வதிவிட பயிற்சி பட்டறையில் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தனர். தொடர்ச்சியாக அலுவலக கடமைகளில் ஈடுபட்டு வருவதால் ஏற்படும் சோர்வு நிலை போக்கி ஊழியர்கள் ஓரிடத்தில் ஒன்று கூடியதால் தாங்களிடையே அன்னியோன்யம் மேலும் அதிகரித்துள்ளதாக இங்கு கலந்து கொண்ட ஊழியர் ஒருவர் கருத்துத் தெரிவித்தார்.

குறித்த பயிற்சி பட்டறையில் தான் பல்வேறு புதிய விடையங்களை அறிந்து கொண்டதாகவும் இவ்வாறான பயிற்சி நிகழ்வுகள் இன்னும் இடம்பெறவேண்டும் என்றும் பயிற்சி பட்டறையை ஏற்பாடு செய்திருந்த பேராசிரியர் சல்பியா உம்மா உள்ளிட்ட அணியினருக்கு நன்றி தெரிவிப்பதாகவும் இன்னும் ஒருவர் கருத்து வெளியிட்டார்.

# வயம்ப கராத்தே போட்டியில் புத்தளம் மாணவர்களுக்கு 2 தங்கம் 2 வெள்ளிப் பதக்கங்கள்






(எம்.எச்.எம் சியாஜ்)

வயம்ப பல்கலைக்கழகத்தில் கடந்த 17 ஆம்திகதி நடைபெற்ற கராத்தே சுற்றுப் போட்டியில் புத்தளத்தை சேர்ந்த மூன்று மாணவர்கள் இரண்டு தங்கம் இரண்டு வெள்ளி பதக்கங்களை பெற்றுள்ளார்கள்.

21 வயதிற்கு உட்பட்ட காத்தா மற்றும் குமித்தே ஆகிய இரு போட்டிகளிலும் புத்தளம் சாஹிரா தேசிய கல்லூரி பழைய மாணவர் ஏ.எம்.அஸாம் தங்கம் மற்றும் வெள்ளிப்பதக்கங்களை பெற்றுள்ளார்.

14 வயதிற்குறப்பட்ட குமித்தே போட்டியில் மதுரங்குளி எக்ஸெலன்ஸ் ஆங்கில பாடசாலையில் கல்வி பயிலும் மாணவன் யூ. தாமீர் தங்கப் பதக்கத்தையும், புத்தளம் காஸிம் சிட்டி பாடசாலை மாணவன் மாஷின் அஹ்மத், 15 வயதிற்குட்பட்ட குமித்தே போட்டியில் வெள்ளிப் பதக்கத்தையும் வென்றுள்ளனர்.

இந்த மாணவர்களை “டபில்யூ.எஸ்.கே.ஏ.” கழகத்தின் கராத்தே பிரதான போதனாசிரியரான சிஹான் எம். பைரோஸ் பயிற்றுவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.



# கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தில் பாரிய ஊழல் உயரதிகாரிகளால் மூடி மறைக்கப்படுவதாக சந்தேகம்!

## நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் குற்றச்சாட்டு



(ஹஸ்பர்)

கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தில் கொள்வனவு, வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்தல் மற்றும் அச்சிடல் விடயங்களில் கடந்த சில வருடங்களாக பாரிய ஊழல் இடம்பெற்று வருகின்றது. இது தொடர்பாக உயரதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்ட போதிலும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட வில்லை என தெரிவிக்கப்படுகின்றது என ஐக்கிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்டப் நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு இன்று கருத்து தெரிவித்த அவர் மேலும் கூறியுள்ளதாவது,

கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்திற்கு வருடாந்தம் அரசாங்கத்தினால் பெருமளவு நிதி ஒதுக்கப்படுகின்றது. அதேபோல உலக வங்கி நிதி ஒதுக்கீடுகள் கிடைக்கப்பெறுகின்றன. யுனிசெப் நிதி ஒதுக்கீடுகளும் வருகின்றன. இந்த நிதி ஒதுக்கீடுகள் மூலம் மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டங்களில் ஊழல்கள் இடம்பெற்று வருவதாகவும், இது தொடர்பாக உயரதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்ட போதிலும் நடவடிக்கை எடுக்கப்பட வில்லை எனவும் எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள புத்தகங்கள் அதிக விலைக்கு அச்சிடப்பட்டுள்ளன. அதேகாலப் பகுதியில் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட பாடப் புத்தகங்களின் செலவுகளோடு ஒப்பிடுகையில் இங்கு பாரிய அதிகரிப்பு இருப்பதை அவதானிக்க முடிகின்றது. இதனைவிட கல்வி வெளியீட்டுத் திணைக்களம் வெளியிட்ட புத்தகங்களில் வர்ணங்கள் இருக்கின்றன. தாளும் தரமானது. இங்கு அவ்வாறெல்லாம் இல்லை.

அச்சிடப்பட்ட ஏ4 தாள்களும் அதிக விலைக்கு அச்சிடப்பட்டுள்ளன. இவ்வாறு பல ஆயிரக்கணக்கான புத்தங்கள், தாள்கள் அச்சிடப்பட்டுள்ளன. இவற்றில் மில்லியன் கணக்கான ரூபாய்கள் மேலதிகமாக செலவு செய்யப்பட்டுள்ளன.

பல மில்லியன் ரூபாய்களுக்கு கொள்வனவு செய்யப்பட்ட ஸ்மார்ட் போட்கள், மடிக்கணனிகள், கணனிகள், பிரிண்டர்கள் போன்றன குறித்து நுணுகி ஆராய்ந்து முறையான விசாரணைகளை முன்னெடுத்தால் அங்கும் பாரிய விலை வித்தியாசங்களைக் கண்டு கொள்ள முடியும் என்று கூறப்படுகின்றது.

யுனிசெப் நிதி மூலம் முன்பள்ளிகளின் அபிவிருத்திக்கென வழங்கப்பட்ட நிதிகளிலும் பாரிய ஊழல்கள் இருப்பதாக கூறப்படுகின்றது. கிழக்கு மாகாணத்தில் முன்பள்ளி பணியகம் இருக்கின்ற போதிலும் முன்பள்ளிகளின் அபிவிருத்திப் பணிகள் மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் அரச சார்பற்ற அமைப்புகள் மூலம் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறித்தும் பாரிய சந்தேகங்கள் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வருடாந்தம் கல்வி அபிவிருத்திக்காக மில்லியன் கணக்கான ரூபாய்கள் செலவு செய்யப்பட்டுள்ள போதிலும் இன்னும் சில பரீட்சைகளில் மாகாணம் கடைசி நிலையில் இருப்பதற்கான காரணம் உரிய நிதி செலவுகள் தொடர்பான பின் மதிப்பீடுகன் செய்யப்படாமையாகும். இங்கு ஊழல்கள் இருப்பதால் தான் இந்த பின் மதிப்பீடுகள் செய்யப்படாமல் உள்ளன.

அரசாங்கத்திடம் உண்மையான ஊழல் ஒழிப்பு நோக்கம் இல்லை. இருந்தால் இது போன்ற ஊழல்களை கண்டு பிடித்து உரிய நடவடிக்கை எடுக்க அதிக நிதியை மீதப்படுத்தியிருக்கலாம். ஊழல் ஒழிப்பு என்று பொது மக்களையும், ஐ.எம்.எப் பையும் ஏமாற்றும் பணிகளையே அரசாங்கம் செய்து வருகின்றது. - என்றார்.

# விசேட தேவையுடையோருக்கான உபகரணங்கள் பொத்துவிலில் பயனாளிகளுக்குக் கையளிப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட விசேட தேவையுடையோருக்கான உபகரணங்களில் ஒரு தொகை பொத்துவில் பிரதேச செயலகத்தில் உரிய பயனாளிகளுக்கு கையளிக்கப்பட்டன.

பொத்துவில் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் எம்.இராமகுட்டி தலைமையிலான இந்த நிகழ்வில் திகாமடுல்ல பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எம்.எஸ்.முஸராப் கலந்து கொண்டு உபகரணங்களை பயனாளிகளிடம் வழங்கி வைத்தார்

இந்த நிகழ்வில் பொத்துவில் பிரதேச செயலக கணக்காளர் அப்துல் றஹ்மான், நிருவாக உத்தியோகத்தர் எம்.எம்.சுபையிர், சமூக சேவைகள் உத்தியோகத்தர் ஏ.ஜீ. அர்ஸாத், பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர் எம். பதிஹ் மற்றும் பாராளுமன்ற உறுப்பினரின் அம்பாரை மாவட்டத்திற்கான ஒருங்கிணைப்பாளர் வை.எல்.நியாஸ், பொதுமக்கள் தொடர்பாடல் உத்தியோகத்தர் மற்றும் பல முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.








# இருவேறு குற்றச்சாட்டில் 4 டிப்பர்கள் சிக்கின



தருமபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லாற்றுப்பகுதியில் சட்ட விரோத மணல் அகழ்வு நடைபெறுவதாக தருமபுரம் பொலிசாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய நேற்று நடத்திய வீதிச்சோதனையில், கல்லாறு பகுதியிலிருந்து வந்த இரண்டு டிப்பர்களைச் சோதனையிட்டபோது போலி மணல் அனுமதிப்பத்திரத்தினை பயன்படுத்தி மணல் அகழ்வு நடைபெற்றது அம்பலமானது.


அதனையடுத்த இரண்டு டிப்பர்களும் தருமபுரம் பொலிசாரல் பறிமுதல் செய்யப்பட்டதுடன் இரண்டு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டனர்.

இதேபோன்று விசுவடு பகுதியிலிருந்து மணல் ஏற்றிப் பயணித்த இரண்டு டிப்பர்கள் வீதிச்சோதனையின் பொழுது அனுமதிப்பத்திரத்திற்கு முரனான வகையில் மணல் ஏற்றி வந்தமை அடையாளங்காணப்பட்டது. இரண்டு டிப்பர்களும் பொலிசாரால் பறிமுதல்,செய்யப்பட்டதுடன் அவற்றின் சாரதிகளும் கைதுசெய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட நான்கு பேரையும் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை ஏடுக்கப் பட்டுள்ளதாக தருமபுரம் பொலிசார் தெரிவித்தனர். (020)

# கல்முனை ஆதார வைத்தியசாலை வருடாந்த ஒளி விழா நடைபெற்றது





(வி.ரி. சகாதேவராஜா)

கல்முனை ஆதார வைத்திய சாலையின் வருடாந்த ஒளி விழா வைத்தியசாலையின் சுகநல சேவை கிறிஸ்தவ ஐக்கிய அங்கத்தவர்களின் ஏற்பாட்டில் வைத்தியசாலை ஒன்றுகூடல் மண்டபத்தில் மிகச் சிறப்பாக நேற்று நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் இரா. முரளீஸ்வரன் கலந்து சிறப்பித்தார்.

விசேட அதிதியாக ஓய்வுபெற்ற மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார பணிப்பாளர் டாக்டர்.கிறீஸ் நவரெட்ணராஜா, சிறப்பு விருந்தினராக வைத்தியர் டாக்டர். ரேனுகா அருள்தாஸ் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

# JRIDE
BEYOND THE ROAD

# ONLINE TAXI APP FROM JAFFNA



ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.

## நாங்கள் தயாராகிவிட்டோம்!

**யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)**

உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.

இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!




இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!

YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE

GET IT ON Google Play
Download on the App Store



JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

+94 21 222 8358


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.12.2023இல் வெளியிடப்பெற்றது.